මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: PRE/2024/74 2024.09.12

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

### வாக்களிக்க வரும்போது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தேவைப்பாடு

சனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதற்காக தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்லும் போது, பின்வரும் ஆளடையாள ஆவணங்களில் ஒன்றை எடுத்துச்செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதுடன், பரீட்சிப்பதற்கு வாக்கெடுப்பு நிலையத்தில் இருக்கின்ற அலுவலர்களுக்கு அதனைச் சமர்ப்பிப்பது அவசியமாகும்.

**செல்லுபடியாகும் ஆளடையாள ஆவணங்கள்**

1. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை.
2. செல்லுபடியான கடவுச்சீட்டு.
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.
4. அரச சேவை ஓய்வூதியர் அடையாள அட்டை (ஓய்வூதியத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டது).
5. முதியோர் அடையாள அட்டை (பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டது).
6. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் வணக்கத்திற்குரியவர்களுக்கான/ மதகுருமார்களுக்கான அடையாள அட்டை.
7. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் தேசிய அடையாள அட்டைத் தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதம்.
8. தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் தற்காலிக அடையாள அட்டை.
9. வலிமையிழந்த ஆட்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் தற்காலிக அடையாள அட்டை.

மேற்படி அடையாள அட்டைகளில் ஏதேனுமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்பட மாட்டாது.

அதேபோல், தெளிவின்றிய அடையாள அட்டைகள் (அதிலுள்ள நிழற்படத்தின் மூலம் ஆளை அடையாளம் காண முடியாதிருப்பின் அல்லது பெயரை வாசிக்க முடியாதவாறு பெயர் அழிந்திருப்பின்), அமைச்சுக்கள்/திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களினால் விநியோகிக்கப்பட்டுள்ள சேவை அடையாள அட்டைகள், தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும்போது விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் முதலிய நிழற்படம் அடங்கிய அல்லது அடங்கியிராத வேறேதேனுமோர் ஆவணம், வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்